# நமது தின கனி
காலை நாளிதழ்
NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 78 | 4 Pages | 20.10.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 78 | 4 பக்கங்கள் | 20.10.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஹமாஸ் தாக்குதலுக்கு ஈரான் தான் காரணம் இஸ்ரேல் அமைச்சர் பரபரப்பு வாக்குமூலம்



இஸ்ரேல்

இஸ்ரேலுக்கும்ஹமாஸ் அமைப்புக்கும் போர் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதேபோல் இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பும் தாக்குதல் நடத்துகிறது.

இந்நிலையில், இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பின்னணியில் ஈரான் இருப்பதாக இஸ்ரேல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், " ஹமாஸ், ஹிஸ்புல்லாவிற்கு பணமும், ராணுவ உதவியும் கொடுப்பது ஈரான் தான்.

பயங்கரவாத தாக்குதலில் ஈரானின் பங்கை, வரும் நாட்களில் வெளியிடுவோம்.

சவுதி இஸ்ரேல் உறவுகளை கெடுக்கவே இந்த தாக்குதல் நடந்துள்ளது" என்றார்.

## பாலஸ்தீன அதிபருடன் பேச்சு மனிதாபிமான உதவிகளை வழங்குவதாக பிரதமர் மோடி உறுதி



டெல்லி, அக். 20

காசாவில் மருத்துவமனை தாக்குதலில் உயிரிழந்தோருக்கு பிரதமர் மோடி இரங்கல்.

இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனையில் இந்தியாவின் நீண்டக்கால நிலைப்பாடு குறித்து மீண்டும் வலியுறுத்தல்.

பாலஸ்தீன அதிபர் மஹ்மொத் அப்பாஸ் உடன் பிரதமர் மோடி பேசினார். அப்போது, காசாவில் மருத்துவமனை தாக்குதலில் உயிரிழந்தோருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்தார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

பாலஸ்தீன அதிபர் எச்.இ. மஹ்மொத் அப்பாஸ் உடன் பேசினேன். காசாவில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனையில் பொதுமக்கள் உயிரிழப்புக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டேன்.

பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்குவோம். பிராந்தியத்தில் பயங்கரவாதம், வன்முறை மற்றும் மோசமடைந்து வரும் பாதுகாப்பு நிலைமை குறித்து எங்களின் ஆழ்ந்த கவலையை பகிர்ந்து கொண்டோம்.

இஸ்ரேல்பாலஸ்தீனவிவகாரத்தில் இந்தியாவின்நீண்டகால கொள்கை நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## "இது இஸ்ரேலுக்கு இருண்ட நேரம் நீங்கள் வெல்ல வேண்டும்": சுனக் திட்டவட்டம்



இஸ்ரேல், அக். 20

இரண்டாம் உலக போர் தீவிரமாக நடைபெற்ற காலகட்டத்தில் தனது நாட்டின் இறையாண்மையை குறித்து முக்கிய முடிவு எடுக்க வேண்டிய கட்டத்தில் இருந்த அப்போதைய இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், "இது இருண்ட காலம்" என வர்ணித்ததை குறிப்பிட்ட இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, தற்போதைய நிலையை "இது இஸ்ரேலின் இருண்ட காலம் மட்டுமல்ல; உலகத்தின் இருண்ட காலம்" என கூறியுள்ளார்.

நேதன்யாகுவுடனான சந்திப்பு நிறைவடைந்ததும் பேசிய ரிஷி சுனக் தெரிவித்ததாவது:

இஸ்ரேல் தற்போது அதன் வரலாற்றில் முதல்முறையாக இருண்ட காலகட்டத்தை (darkest hour) சந்தித்து வருகிறது. தன்னை பாதுகாத்து கொள்ளும் உரிமை இஸ்ரேலுக்கு நிச்சயம் உண்டு. சர்வதேச சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தன் தேச இறையாண்மையை காக்க இஸ்ரேல் எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் இங்கிலாந்து துணை நிற்கும். ஒரு நீண்ட போருக்கு இஸ்ரேலுக்கு நீடித்த ஆதரவு தேவைப்படுகிறது. உங்களுடன் இந்த இருண்ட காலத்தில் நண்பனாக துணை நிற்பதில் பெருமையடைகிறேன். உங்களுடன் ஒன்றுபட்டு நிற்கிறோம். நீங்கள் நிச்சயம் வெற்றி அடைய வேண்டும்; நீங்கள் வெல்வதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். இவ்வாறு ரிஷி சுனக் தெரிவித்தார். இஸ்ரேல் சுற்றுப்பயணம் முடிந்ததும் ரிஷி சுனக், சவுதி அரேபியா செல்ல உள்ளார்.

# மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாருக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்கு: மு.க. ஸ்டாலின்





சென்னை, அக். 20

ஆன்மீகவாதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் (82) மாரடைப்பு ஏற்பட்டு காலமானார். பங்காரு அடிகளார்மேல்மருவத்தூரில் ஆதி பராசக்தி சித்தர் பீடத்தை நிறுவி குருவாக இருந்தார். ஆதி பராசக்தி சித்தர் பீடத்தில் அனைத்து நாட்களிலும் பெண்கள் வழிபடலாம் என்ற முறையை அமல்படுத்தி பெரும் புரட்சி செய்தார்.

உடல்நலக் குறைவால் உயிரிழந்த பங்காரு அடிகளார் மறைவுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து உள்ளார். மேலும் அடிகளாரின் இறுதி சடங்குகள் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்றும் அறிவித்துஇருக்கிறார்.உயிரிழந்தபங்காரு அடிகளாருக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நாளை நேரில் அஞ்சலி செலுத்துகிறார்.

இது தொடர்பாகஅவர்வெளியிட்டு இருக்கும் இரங்கல் செய்தியில், "மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் திரு. பங்காரு அடிகளார் அவர்கள் மறைவெய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். திரு. பங்காரு அடிகளார் அவர்களின் சேவைகளைப் போற்றும் வகையில், அரசு மரியாதையுடன்அவரது இறுதி நிகழ்வு நடைபெறும்," என்று தெரிவித்து இருக்கிறார்.

இதே போன்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில், பங்காரு அடிகளாருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

## பல்லடத்தில் காமராஜர் வேடமிட்டு பா.ஜ.க. பிரச்சாரம்: காங். புகார்



பல்லடம், அக். 20

பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை என் மண் என் மக்கள் என்ற பாதயாத்திரை நடத்தி வருகிறார். இந்த நிலையில் இன்று பல்லடம் நகருக்கு வர உள்ளார். இதன் விளம்பர துண்டு பிரசுரங்களை பல்லடம் கடைவீதியில் பாஜகவினர் விநியோகம் செய்தனர்.இதில் காமராஜர் போல் வேடமணிந்து துண்டு பிரசுரங்களை வழங்கியதற்கு காங்கிரசார் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.மேலும் இது குறித்து அவர்கள் போலீசாரிடம் புகார் அளித்துள்ளனர்.பல்லடம் காங்கிரஸ் நகர தலைவர் ஈஸ்வரமூர்த்தி, திருப்பூர் மாவட்ட வர்த்தக காங்கிரஸ் தலைவர் எம். மணிராஜ்,காங்கிரஸ் பல்லடம் வட்டார தலைவர் சு.கணேசன், நகர வர்த்தக அணி தலைவர் ஆர். சுரேஷ் உள்ளிட்டோர் பல்லடம் போலீஸ் நிலையத்தில் நேற்று அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:

பல்லடத்திற்கு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை வருகையையொட்டி முன்னாள் முதல்வர் காமராஜர் வேடமிட்ட நபரை அழைத்து சென்று பாஜக.வினர் கடைவீதியில் துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.காமராஜர் மதசார்பின்மை கொள்கை உடையவர். அவரது வேடத்தை கொள்கை வேறுபாடு கொண்ட பாஜக.வினர் பயன்படுத்துவது நியாயம் அல்ல.மேலும் கடைசி வரை காங்கிரஸ் கட்சியில் இருந்து தான் மறைந்தார். அடிப்படைக் கொள்கையில் மாறுபட்ட தலைவரை சுயநலத்திற்காக பயன்படுத்துவது தவறு.காமராஜர் எந்த சமயத்திலும் மதத்தையோ,மக்களை பிரிவு படுத்தும் செயல்களுக்கோ ஒருபோதும் அனுமதித்ததில்லை. அப்படிப்பட்ட தலைவரை மதத்தை தீவிரமாக பின்பற்றும் கட்சியினர் பயன்படுத்தியது முற்றிலும் தவறானது.எனவே இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.மேலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால், பாதயாத்திரை வரும்அண்ணாமலைக்குகாங்கிரஸ் கட்சியின் சார்பில் கருப்பு கொடி காட்டப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

## லியோ படம் ரிலீஸ் விஜய் ரசிகர்கள் கொண்டாட்டத்தால் களை கட்டிய திருப்பூர் தியேட்டர்கள் வசூலில் சாதனை படைக்கும் என கருத்து





திருப்பூர், அக்.20

நடிகர் விஜய் நடித்துள்ள லியோ திரைப்படம் இன்று தமிழகம் மட்டுமின்றி உலகம் முழுவதும் வெளியானது. இதனை விஜய் ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். திருப்பூர் மாவட்டத்தில் லியோ திரைப்படம் மொத்தம் 56 தியேட்டர்களில் திரையிடப்பட்டுள்ளது. இந்த தியேட்டர்களில் இன்று காலை முதலே ரசிகர்கள் குவிந்தனர். காலை 9மணிக்கு படம் திரையிடப்பட்டது. மதியம் 12 30மணிக்கு படம் முடிந்து வெளியே வந்தனர். திருப்பூரில் உள்ள பிரபல தியேட்டரில் லியோ திரைப்படம் பார்த்து விட்டு வெளியே வந்த ரசிகர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

லியோ திரைப்படம் வேற லெவலாகஉள்ளது.டைரக்டர்லோகேஷ் கனகராஜ் பட்டய கிளப்பியுள்ளார். இதற்காக அவர்களுக்கு நாங்கள் மிகவும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். ஆரம்பம் முதல் கடைசி வரை படம் மிகவும் விறுவிறுப்பாக செல்கிறது. அனைவருக்கும் பிடிக்கும் படமாக லியோ இருக்கும். தொடர்ந்து விடுமுறை என்பதால் லியோ வசூலில் சாதனை படைப்பது உறுதி. இப்படத்தில் அரசியல் எதுவும் கிடையாது. தொடர்ந்து விடுமுறை என்பதால் மீண்டும் இந்த திரைப்படத்தை பார்ப்போம். அனிருத் இசை மிகவும் அருமை. வித்தியாசமாக இசையமைத்து மெய்சிலிர்க்க வைத்துள்ளார். நா ரெடி, அண்ணன் வரவா, பேடாஸ் உள்ளிட்ட பாடல்கள் புல்லரிப்பை ஏற்படுத்துகிறது. ரசிகர்களுக்கு மிகவும் கொண்டாட்டமாக அமைந்தது. பொதுமக்களுக்கு இது மிகவும் பிடிக்கும். லியோ திரைப்படம் சாதனை படைப்பது உறுதி என்றனர்.

முன்னதாக திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் லியோ திரைப்படம் திரையிடப்பட்ட தியேட்டர்கள் முன்பு விஜய் ரசிகர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர். மேலும் தியேட்டர்கள் முன்பு விஜய் பட கட்அவுட்டுகள், பேனர்கள் வைக்கப்பட்டு இருந்தது. முதல் காட்சியையொட்டி மேள தாளம் முழங்க ஆடி பாடி மகிழ்ந்தனர். இதனால் லியோ திரைப்படம் திரையிடப்பட்ட அனைத்து தியேட்டர்களும் களை கட்டி காணப்பட்டன. மேலும் அப்பகுதியில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலை போலீசார் சரி செய்தனர்.

## திருப்பூரில் நவராத்திரி விழா வழிபாடு



திருப்பூர், அக். 20

திருப்பூர் கே.பி.என்.காலனி 5வது வீதியில் அமைந்துள்ள விகாஸ் வித்யாலயா பள்ளி மற்றும் வித்யாசாகர் இன்டர்நேஷனல் பள்ளியின் தாளாளர் ஆண்டவர் ராமசாமியின் வீட்டில் 25வது ஆண்டு நவராத்திரி விழா நடந்து வருகிறது. இதையொட்டி அவரது வீட்டில் 9 படிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இந்துகடவுள் சிலைகள், இயேசு, மாதா சிலை மற்றும் மும்மதத்தை குறிக்கும் வகையில் கொலு வைக்கப்பட்டுள்ளது. இதேபோல் மகாத்மா காந்தி, காமராஜர், அண்ணா, அம்பேத்கர், அப்துல்கலாம், அன்னை தெரசா, விவேகானந்தர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் சிலை மற்றும் கம்பா நதியில் ஏகாம்பரேஸ்வரை ஏழவார்குழலி வழிபடும் சிலை, நவதுர்கை, சிவதாண்டவம், லலிதாம்பிகை தர்பார், சுருட்ட பள்ளீஸ்வரர் உள்ளிட்ட பல்வேறு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தினமும் மாலை 6 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும் சிறப்பு பூஜையில் உற்றார்உறவினர்மற்றும்நண்பர்கள் உள்படபலர்கலந்துகொள்கின்றனர். பூஜையில் விகாஸ் வித்யாலயா பள்ளி மற்றும் வித்யாசாகர் இன்டர்நேஷனல் பள்ளியின் தாளாளர் ஆண்டவர் ராமசாமி, அவரது மனைவி ராதா, மகன் மாதேஸ்வரன், மகள்கள் கவிதா, மகாலட்சுமி, மருமகள்சிவப்பிரியா, மருமகன்கள் கவுரி சங்கர், சுரேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# பொது ஒப்பந்தப்புள்ளி / பொது ஏல இனங்களுக்கான திருத்த அறிவிக்கை மற்றும் மறு பொது ஒப்பந்தப்புள்ளி / மறு பொது ஏல இனங்களுக்கான திருத்த அறிவிக்கை

திருப்பூர், அக். 20

திருப்பூர் மாநகராட்சியின்மூன்றாண்டு குத்தகை இனங்கள் மற்றும் 9 ஆண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏல அறிவிக்கை 19/10/2023 மற்றும் 20/10/2023 ஆகிய நாட்களில் நடைபெற அறிவிக்கை வெளியிடப்பட்டது.

மேற்படி அறிவிக்கை 08/10/2023 நாளில் தினகரன், மாலை மலர் மற்றும் மாலைமுரசு செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்டது.

அதேபோன்று மறு பொது ஒப்பந்தப்புள்ளி / மறு பொது ஏல இனங்களுக்கான அறிவிக்கை 08/10/2023, 11/10/2023, தினகரன், மாலைமலர், மாலைமுரசு மற்றும் தினதந்தி செய்தி தாளில் வெளியிடப்பட்டது. மேற்படி,அனைத்து இனங்களுக்கான பொது ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் மற்றும் மறு பொது ஒப்பந்தப்புள்ளி / மறு பொது ஏல இனங்கள் நிர்வாக காரணங்களுக்காக நிறுத்து வைத்து எதிர்வரும் 26/10/2023 அன்று நடைபெறவுள்ளதற்கு திருத்திய அறிவிக்கை இதன் மூலம் வெளியிப்படுகிறது.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஊராட்சி ஒன்றியம் மாணிக்காபுரம் ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை மேம்பாட்டு பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

# திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள், படையில் பணிபுரியும் படை வீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம்

திருப்பூர், அக். 20

திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள், படையில் பணிபுரியும் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம்; 27102023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 04 மணிக்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் (தரைத்தளம் அறை எண். 20ல்) மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. எனவே திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை விண்ணப்பம் வாயிலாக இரட்டைப் பிரதிகளில் குறைதீர்க்கும் முகாமில் பிற்பகல் 3 மணிக்குள் சமர்ப்பித்து பயனடையுமாறு திருப்பூர் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நல உதவி இயக்குநர் (கூபொ) தெரிவித்துள்ளார்கள்.

# சாமளாபுரத்தில் தூய்மை பணியாளர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம்

மங்கலம்: அக். 20

திருப்பூர் மாவட்டம் சாமளாபுரம் பேரூராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்திற்கான கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் விநாயகா பழனிச்சாமி, பேரூராட்சி செயல் அலுவலர் ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சாமளாபுரம் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் உள்பட பலர்கலந்துகொண்டனர். இந்தகூட்டத்தில்மழைநீர் வடிகால் சுத்தம் செய்தல் குறித்தும், கழிவுநீர் குழாய் பராமரிப்பு, பொதுக்கழிப்பறைகளை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# தாராபுரத்தில் ஆற்றல் அறக்கட்டளை சார்பில் உணவகம் திறப்பு

தாராபுரம், அக்.20

தாராபுரம் பகுதியில் பொதுமக்களுக்காக ஆற்றல் உணவகம் திறக்கப்பட்டது. இது குறித்து ஆற்றல் அறக்கட்டளை நிறுவன தலைவர் ஆற்றல் அசோக்குமார் கூறுகையில், அறக்கட்டளை சேவைகளை விரிவுபடுத்தும் வகையில் தாராபுரம் பகுதியில் பொதுமக்களுக்காக ஆற்றல் உணவகம் மற்றும் ஆற்றல் மருத்துவமனை தொடங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் அடுத்த மாதம் காங்கேயம் பகுதியில் ஆற்றல் உணவகம் திறக்கப்படும் என்றார்.



நிகழ்ச்சியில் அறக்கட்டளை மாநில செய்தி தொடர்பாளர் கார்வேந்தன் ,மாநில விவசாய அணி பிரிவு துணைச் செயலாளர் பார்த்தசாரதி, இந்து முன்னணி திருப்பூர் மாவட்ட புறநகர் கோட்ட பொறியாளர் கோவிந்தராஜ், கூட்டுறவு சங்க பிரிவு செயலாளர் சுகுமார், பொன்னிவாடி ஊராட்சி மன்ற தலைவர் பன்னீர் செல்வம், ருத்ராவதி பேரூராட்சி செயலாளர் மோகன் ராஜ் மற்றும் பொதுமக்கள் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தென்னை விவசாயிகளிடம் இருந்து கொப்பரை தேங்காய் கொள்முதல்

திருப்பூர்: அக். 20

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

விவசாயிகளின் விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், அவர்களது வருவாயைப் பெருக்கவும் தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தென்னை சாகுபடி செய்த விவசாயிகள் பயனடையும் வகையில் அவர்கள் விளைவித்த கொப்பரையை விலை ஆதரவு திட்டத்தின்கீழ் கூடுதலாக 6,600 மெட்ரிக் டன் அரவை கொப்பரை, 400 மெட்ரிக் டன் பந்து கொப்பரை ஆகியவற்றை கொள்முதல் செய்ய நவம்பர் 26ந் தேதி வரையில் காலக் கெடு நீட்டிக்க ப்பட்டுள்ளது.



தேங்காய் கொப்பரை கிலோ ரூ.108.60, பந்து தேங்காய் கொப்பரை கிலோ ரூ.117.50 க்கும் மத்திய அரசின் நாபெட் நிறுவனத்தின் மூலமாக கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டு, கடந்த ஏப்ரல் 1ந் தேதி முதல் செப்டம்பர் 30ந் தேதி வரையில் 11,143 விவசாயிகளிடம் இருந்து ரூ.172.92 கோடிக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ் பயன்பெறும் விவசாயிகள் தங்களது நிலத்தின் சிட்டா அடங்கல்,

ஆதார் அட்டை நகல், வங்கிக் கணக்கு விவரம் ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள ஒழு ங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளரை அணுகி பதிவு செய்து கொள்ளலாம். தேங்காய் கொப்பரைக்கான உரியத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள் தமிழக அரசின் இந்த கொப்பரை கொள்முதல் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருப்பூர் மின் மயான நடுரோட்டில் ஆபத்தான பள்ளம்

திருப்பூர், அக். 20

திருப்பூர் மின் மயானம் அருகே செல்லும் நடுரோட்டில் ஏற்பட்ட சிறிய குழியை மூட மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர் முன்னா ஏற்கனவே கோரிக்கை விடுத்து இருந்தார். தற்போது இந்தக் குழியில் வாகனங்கள் செல்ல, செல்ல மேலும் பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பள்ளத்தில் உள்ளிருக்கும் அனைத்து கேபிள்களும் வெளியே தெரியும் வகையில் ஆபத்தான நிலையில் காணப்படுகிறது. எனவே மாநகராட்சி அதிகாரிகள் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் சமூக ஆர்வலர் மீண்டும் கோரிக்கைவிடுத்துள்ளார்.



# விவேகானந்தா வித்யாலயா பள்ளி மாணவர்கள் மாநில தடகள போட்டிக்கு தேர்வு

திருப்பூர், அக். 20

திருப்பூர் மாவட்ட அளவிலான தடகள போட்டி பல்லடம் அம்பாள் புரொபஷனல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் திருப்பூர் கே.செட்டி பாளையத்தில் உள்ள விவேகானந்தா வித்யாலயா பள்ளி மாணவமாணவிகள் கலந்துகொண்டனர்.

போட்டியில் 14 வயதிற் குட்பட்டோர் மாணவர் பிரிவில் குண்டுஎறிதல் போட்டியில் 9ம் வகுப்பு மாணவன் ஆர்.கோகுல் 2ம் இடமும், 19 வயதிற் குட்பட்டோர்பிரிவில் 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தில் பிளஸ்1 மாணவர் பி.சந்துரு 2ம் இடமும், 17 வயதிற்குட்பட்டோர் மாணவிகள் பிரிவில் நீளம் தாண்டுதல் போட்டியில் 9ம் வகுப்பு மாணவி எம். வைஷ்ணவி முதலிடமும், 17 வயதிற்குட்பட்டோர் மாணவிகள் பிரிவில் மும்முறை தாண்டுதல் போட்டியில் 9ம் வகுப்பு மாணவி ஜி.ஆதியா 2ம் இடமும், 100 மீட்டர் ஓட்டத்தில் 2ம் இடமும் பிடித்தார். 4X100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆதியா, வைஷ்ணவி, சுதீபா, சர்விகா, கார்னிகா ஆகியோர் முதலிடம் பெற்றனர். வெற்றி பெற்ற 2 மாணவர்களும், 5 மாணவிகளும், செங்கல்பட்டில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றனர்.



வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை பள்ளி நிர்வாகிகள், முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

# கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட இலவச மருத்துவ சிறப்பு முகாம்: இன்று நடக்கிறது

திருப்பூர், அக். 20

வெள்ளகோவில் வட்டார அரசு ஆரம்ப சுகாதாரநிலையம்சார்பாக கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின் இலவச மருத்துவ முகாம் வெள்ளகோவில் காடையூரான்வலசு பகுதியில் வருகிற 21ந் தேதி நடைபெறுகிறது. வெள்ளகோவில் காடையூரான்வலசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற உள்ள இந்த மருத்துவ முகாமில் இதய நோய், சர்க்கரை நோய், சித்த மருத்துவம், புற்று நோய், ரத்த அழுத்தம், ஸ்கேன் பரிசோதனை, இசிஜி பரிசோதனை போன்ற 20க்கும் மேற்பட்ட மருத்துவ சேவைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது. மாவட்ட கலெக்டர் கிறி ஸ்துராஜ் தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் முகாம் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வட்டார மருத்துவ அலுவலர் டி.ராஜலட்சுமி செய்து வருகிறார். பொது மக்கள் அனைவரும் இந்த மருத்துவமுகாமில்கலந்து கொண்டுபயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளியில் நவராத்திரி விழா

திருப்பூர், அக். 20

திருப்பூர் கிட்ஸ் கிளப் பள்ளியில் நலம் தரும் நவராத்திரியின், 9 நாட்கள் இந்திய விண்வெளிக் கொண்டாட்டங்கள் என்ற தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் விண்வெளி உலக மாதிரி, ஏலியன், சந்திராயன் 3 ஏவுகணை, குண்டு தாங்கி வானத்தில் செல்லக்கூடிய படைக்கருவி , செட்டியார் கடை, கொலு பொம்மைகள் ஆகியவற்றைக் கொண்டு நவராத்திரி கொலு அமைத்து ஆசிரியர்களும், மாணவர்களும் வழிபட்டு மகிழ்ந்தனர். நவராத்திரியின் சிறப்புமிக்க ஒன்பது நாள் கொண்டாட்டம் மாணவர்கள் மனதில் மகிழ்ச்சியையும், பக்தி உணர்வினையும் விதைப்பதாக இருக்கின்றது. விரதத்தின் மகிமையைத் தெரிந்து கொண்டு சிறுவர்களும் பக்தியுடன் வழிபாடுகளை மேற்கொண்டனர். பண்டிகையாக கொண்டாடும் விதமான நவராத்திரி கொண்டாட்டம் நாம் அனைவரும் உணர்ந்து அனுஷ்டித்து நன்மை பெறுவோம் என்று கிட்ஸ் கிளப் பள்ளியின் தாளாளர் நிவேதிகா, மாணவ மாணவியர்களிடம் எடுத்துக் கூறினார்.



# திருப்பூரில் அ.தி.மு.க. 52வது ஆண்டு விழா பொதுக்கூட்டம்: பொள்ளாச்சி ஜெயராமன், எம்.எல்.ஏ. பங்கேற்பு

திருப்பூர், அக். 20

அ.தி.மு.க. திருப்பூர் மாநகர் மாவட்டத்தின் தென்னம்பாளையம் பகுதி 56வது வட்டம் சார்பில் கட்சியின் 52வது ஆண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் செரங்காட்டில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாணவர் அணி துணை செயலாளர் ஹரிபிரசாந்த் தலைமை தாங்கினார். தென்னம்பாளையம் பகுதி செயலாளரும், மாமன்ற எதிர்க்கட்சி தலைவருமானஅன்பகம் திருப்பதி வரவேற்று பேசினார். மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளரும்,முன்னாள் எம்.எல்.ஏ.வுமான குணசேகரன், பகுதி செயலாளர்கள் கண்ணப்பன், கே.பி.ஜி.மகேஷ்ராம், ஹரிகரசுதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



மாநகர் மாவட்ட செயலாளர் பொள்ளாச்சி ஜெயராமன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி பேசும்போது,

'அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமையும் கூட்டணி அடுத்து வரும் தேர்தல்களில் வெற்றி பெறும் வகையில் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்' என்றார். தலைமை கழக பேச்சாளர் திரைப்பட இயக்குனர் மனோஜ்குமார், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் சிவசுப்பிரமணி, பழனிசாமி ஆகியோர் பேசினார்கள்.

கூட்டத்தில் மாநகர் மாவட்ட அம்மா பேரவை தலைவர் அட்லஸ் லோகநாதன், அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் மார்க்கெட் சக்திவேல் மற்றும் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கருவலூர் பகுதியில் மின்தடை ஏற்படும் பகுதிகள்

அவினாசி, அக். 20


கீழ்க்கண்ட பகுதிகளில் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின்வாரியத்தினர் அறிவித்துள்ளனர்.

குரும்பபாளையம், பெரியகாட்டுப்பாளையம், செல்லப்பாளையம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடை செய்யப்படுகிறது. அவினாசி அருகே உள்ள கருவலூர் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பாரமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் கீழ்க்கண்ட பகுதிகளில் நாளை (வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மின் விநியோகம் இருக்காது என மின்வாரியத்தினர் அறிவித்துள்ளனர். அதன்படி கருவலூர், அரசப்பம் பாளையம், நைனாம்பாளையம், ஆரியக் கவுண்டன்பாளையம், அனந்தகிரி, எலச்சிப்பாளையம், மருதூர், காளிபாளையம், நம்பியாம்பாளையம், உப்பிலிபாளையம், மனப்பாளையம், காரைக்காபாளையம், முறியாண்டாம்பாளையம், குரும்பபாளையம், பெரியகாட்டுப்பாளையம், செல்லப்பாளையம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடை செய்யப்படுகிறது.

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற கர்ணனுக்கு திருப்பூரில் உற்சாக வரவேற்பு

திருப்பூர், அக். 20

அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மாநில குழு கூட்டம் கடந்த 8ந்தேதி மதுரையில் நடைபெற்றது.இந்தகூட்டத்தில் தமிழகத்திற்கான புதிய பொறுப்பாளர்கள் பெயர்கள் மத்திய குழுவிடம் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கட்சியின் அகில இந்திய தலைவர் நரேன் ஜெட்டர்ஜி, தேசிய தொழிற்சங்க பொதுச்செயலாளர் சிவசங்கர் ஆகியோர் வழிகாட்டுதலின்படி, தேசிய பொதுச்செயலாளர் தேவராஜன் தமிழக புதிய பொறுப்பாளர்களை டெல்லி நேதாஜி பவனில் அறிவித்தார்.



இதன்படி அகில இந்திய பார்வர்ட் பிளாக்கட்சியின் மாநில தலைவராக முன்னாள் எம்.எல்.ஏ. பி.வி. கதிரவன், மாநில பொதுச் செயலாளராக எஸ்.கர்ணன், மாநில பொருளாளர் மற்றும் தேசிய செயலாளராக ஸ்ரீவை சுரேஷ்தேவன் உள்ளிட்ட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

மாநில பொதுச்செயலாளராக பொறுப்பேற்ற பிறகு எஸ்.கர்ணன் திருப்பூருக்கு முதல்முறையாக வந்தார். அவருக்கு திருப்பூர் எல்லையான தாராபுரம் ரோடு கோவில்வழியில் அகில இந்திய பார்வர்ட் பிளாக்கட்சியின் திருப்பூர் மாநகர் மாவட்ட தலைவர் மகாலிங்கம், மாவட்ட செயலாளர் மகேஷ்குமார் ஆகியோர் தலைமையில் துணைத்தலைவர் ரவி, அமைப்புச் செயலாளர் காளீஸ்வரன், இளைஞரணி செயலாளர்கள் சின்னதம்பி, பிரபாகரன் மற்றும் நிர்வாகிகள் பட்டாசு வெடித்தும், ஆளுயர மாலை அணிவித்தும் சிறப்பான வரவேற்பு அளித்தனர். மேலும் அங்குள்ள கருப்பராயன் கோவிலில் சிறப்பு பூஜையும் நடைபெற்றது. பின்னர் கட்சியின் மாநகர் மாவட்ட தலைமை அலுவலகத்தில் முக்குலத்தோர் தேசிய கழகத்தின் நிறுவனத்தலைவர் எஸ்.பி. ராஜா, மாநில இளைஞரணி செயலாளர் சுரேஷ் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மாநில பொதுச் செயலாளர் கர்ணனுக்கு சால்வை அணிவித்தும், புத்தகம் வழங்கியும் வாழ்த்து தெரிவித்தனர்.

இதேபோல் பல்வேறு கட்சிகளை சேர்ந்த அரசியல் முக்கிய பிரமுகர்கள் நேரிலும், செல்போன் மூலமாகவும் கர்ணனுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். மாநில பொதுச் செயலாளராக பொறுப்பேற்றுள்ள கர்ணன் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக இருப்பதுடன், மாநில துணை த்தலைவர், மாவட்ட பொதுச் செயலாளர் உள்ளிட்ட பொறுப்புகளையும் வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# திருமூர்த்தி அணையில் இருந்து 4ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு மேலும் 6 நாட்கள் நீட்டிப்பு

உடுமலை, அக். 20

உடுமலை அருகே திருமூர்த்தி அணையில் இருந்து 4 ம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு சுற்று தண்ணீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



இந்நிலையில் பிஏபி., கால்வாயில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் வீணாகியது .இதை ஈடுகட்ட கூடுதல் நாட்கள் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர் .இதை ஏற்று மேலும் 6 நாட்கள் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது : திருமூர்த்தி அணையில் இருந்து பிஏபி., பாலாறு படுகை நான்காம் மண்டல பாசன பகுதிகளில் நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்றவும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும் கூடுதலாக வரும் 24ந்தேதி வரை 6 நாட்களுக்கு காலநீட்டிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது. அதன்படி மொத்தம் 410 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் கோவை திருப்பூர் மாவட்டங்களில் 94.068 ஏக்கர்நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தேசிய விருது வெள்ளியங்கிரி FPOக்கு சத்குரு பாராட்டு

கோவை, அக். 20

வெள்ளியங்கிரி FPO பெற்றிருக்கும் தேசிய விருதை பாராட்டி எக்ஸ் பக்கத்தில் சத்குரு அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்தில்:




"விவசாயிகளின் நல் வாழ்வு மற்றும் செழிப்பை அதிகரிப்பதில் உழவர், உற்பத்தியாளர் நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகின்றன.

இந்நிறுவனங்களால் விவசாயத்தின் இறுதி நோக்கமான தேசத்தின் உணவு மற்றும் தண்ணீர் பாதுகாப்பை நிறைவு செய்ய முடியும். உங்களுடைய குழு வளர்வதற்கு என்னுடைய வாழ்த்துக்கள் மற்றும் ஆசிகள்" என தெரிவித்துள்ளார்.

# பல்லடம் பகுதியில் வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் ஆய்வு

பல்லடம், அக். 20

பல்லடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதன்படி பல்லடம் அருகே உள்ள செம்மிபாளையம் ஊராட்சி நேரு நகர் ஆதிதிராவிடர் காலனியில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலை நீர் தேக்கதொட்டியையும், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.69.17 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 2 கூடுதல் வகுப்பறை கட்டடத்தினையும், செம்மிபாளையம் பகுதியில்ரூ.8 லட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் சமையலறை கூடத்தையும், ரூ.10.93 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி கட்டடத்தையும், இதேபோல பல்லடம் ஊராட்சி ஒன்றியம், மாணிக்காபுரம் ஊராட்சியில் ரூ.52.53 லட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சாலை மேம்பாட்டுப்பணிகளையும், இதேபோல கரடிவாவி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்ரூ.6.30 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கான்கிரீட் சாலை பணிகள் எனமொத்தம் ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளையும், கரடிவாவி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.முன்னதாக கரடிவாவி ஊராட்சியில் தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் சார்பில் தேசிய திட்ட விளக்க பிரச்சார ஊர்தியை கொடியசைத்து துவக்கி வைத்து, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின்கீழ் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



இந்த ஆய்வின் போது, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தேன்மொழி, செம்மிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் ஷிலா புண்ணியமூர்த்தி, கல்விக் குழு தலைவர் புண்ணியமூர்த்தி , மாணிக்காபுரம் ஊராட்சி தலைவர் நந்தினி சண்முகசுந்தரம், கரடிவாவி ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சிதா பகவதி கிருஷ்ணன்,மற்றும் பல்லடம் வட்டாரவளர்ச்சி அலுவலர் மனோகரன், உதவிப் பொறியாளர்கள் குருபிரசாந்த், செந்தில் வடிவேல்,மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அண்ணாமலையின் "என் மண் என் மக்கள்" நடைபயணம் ரத்து

சென்னை, அக். 20

பக்தர்கள் ஏராளமானோர் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மு.க.ஸ்டலின் நாளை நேரில் அஞ்சலி செலுத்த உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆன்மீகவாதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் (82) மாரடைப்பு ஏற்பட்டு காலமானார்.



உடல்நலக் குறைவால் உயிரிழந்த பங்காரு அடிகளார் மறைவுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்து உள்ளார். மேலும், மு.க.ஸ்டலின் நாளை நேரில் அஞ்சலி செலுத்த உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த பங்காரு அடிகளாரின் உடலுக்கு பக்தர்கள் ஏராளமானோர் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தொடர்ந்து, மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் மறைவை முன்னிட்டு பாஜக மாநில தலைவர் அண்ணாமலையின் "என் மண் என் மக்கள்" நாளை நடைபெறவிருந்த நடைப் பயணம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்மீகவாதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் காலமானார்

சென்னை, அக். 20

ஆன்மீகவாதி மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார்(82)மாரடைப்பு ஏற்பட்டு காலமானார்.

பங்காரு அடிகளார் மேல்மருவத்தூரில் ஆதி பராசக்தி சித்தர் பீடத்தை நிறுவி குருவாக இருந்தார்.

ஆதி பராசக்தி சித்தர் பீடத்தில் அனைத்து நாட்களிலும் பெண்கள் வழிபடலாம் என்ற முறையை அமல்படுத்தி பெரும் புரட்சி செய்தார்.



பங்காரு அடிகளாரின் ஆன்மீக சேவையை பாராட்டி கடந்த 2019ம் ஆண்டில் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

சித்தர் பீடம், கல்வி நிறுவனங்கள் மூலம் ஏராளமான சமூக சேவைகளையும் செய்தவர்.

மேல்மருவத்தூர் சித்தர் பீட கருவறையில் அபிஷேக ஆராதனை செய்ய பெண்களை அனுமதித்தவர் பங்காரு அடிகளார்.

அவர், ஆதிபராசக்தி மருத்துவ கல்வி மற்றும் பண்பாட்டு அறக்கட்டளையின் தலைவராக விளங்கி வந்தார்.

பங்காரு அடிகளாரை பின்பற்றும் பக்தர்கள் 15 நாடுகளில் உள்ளனர்.

# காங்கயம் பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்த 10 கடைகளுக்கு சீல்

காங்கயம், அக். 20

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் உத்தரவின் பேரில் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் விஜயலலி தாம்பிகை தலைமையிலான உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், காங்கயம் காவல் துறையினர் அகஸ்தியலிங்கம்பாளையம், ஆலாம்பாடி, கீரனூர், பூமாண்டன்வலசு உள்ளிட்ட பகுதிகளில் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள், நெகிழிப் பைகள் விற்பனை செய்ததாக 10 கடைகளுக்கு 'சீல் வைத்ததுடன், ரூ.43 ஆயிரம் அபராதமும் விதித்தனர். மேலும், இதே போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டால் உணவு தயாரிப்பு மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட உரிமம் ரத்து செய்யப்படும் என்று உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

# "ஆப்ரேஷன் அஜய்" திட்டத்தின் மூலம் இதுவரை 1200 பேர் இந்தியா வருகை மத்திய அமைச்சகம்

டெல்லி, அக். 20

பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் எதிர்ப்பதில் சர்வதேச சமூகம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். பொது மக்கள் உயிர் இழப்பு மற்றும் மனிதாபிமான சூழல் குறித்து இந்தியா தனது கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது. ஆப்ரேஷன் அஜய் திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து இதுவரை 1200 பேர் இந்தியா அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெ ிரவித்துள்ளார்.

மேலும் அவர், " இஸ்ரேலில் நடைபெற்ற கொடூரமான பயங்கரவாத தாக்குதலை நாம் கண்டித்துள்ளோம். ஹமாஸ் தாக்குதலில் இந்தியர்கள் யாரும் உயிரிழந்ததாக இதுவரை எந்த தகவல்களும் இல்லை.

பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் எதிர்ப்பதில் சர்வதேச சமூகம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். பொது மக்கள் உயிர் இழப்பு மற்றும் மனிதாபிமான சூழல் குறித்து இந்தியா தனது கவலைகளை வெளிப்படுத்தியுள்ளது." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு புத்தாக்க மேம்பாட்டு திட்டப்பயிற்சி

திருப்பூர், அக். 20

மாவட்ட பள்ளிக்கல்வித்துறை சார்பில் அரசு பள்ளி ஆசிரியர்களுக்கான பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி அவிநாசியில் நடைபெற்றது.

இப்பயிற்சியை திருப்பூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்நா.கீதாதொடங்கிவைத்தார்.இதில்மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) வி.ரத்தினமூர்த்தி கலந்து கொண்டு பேசினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் எஸ். கணேசன், பாரதியார் பல்கலைக்கழக கள ஒருங்கிணைப்பாளர் பி.சத்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இதில் தனித்திறன் மாணவர்கள், புதிய படைப்புகள் உருவாக்கும் மாணவர்கள் ஆகியோரை தேர்ந்தெடுத்து மாநில அளவில் தமிழக அரசு சார்பில் நடத்தப்படும் போட்டியில் பங்கேற்க செய்வது, மேலும் புதிய படைப்புகளுக்கு காப்புரிமை , பரிசு பெறச் செய்வது உள்ளிட்ட பயிற்சிகள்



ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த 94 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 94 வழிகாட்டி ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# திருமுருகன்பூண்டி நகராட்சியில் தூய்மை பணியாளர்கள் கணக்கெடுப்பு பணி தொடக்கம்

அவிநாசி, அக். 20

திருமுருகன்பூண்டி நகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்துக்கான தூய்மைப் பணியாளர்கள் கணக்கெடுப்புப் பணி தொடங்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்துக்கான தூய்மைப் பணியாளர்கள் கணக்கெடுப்புப் பணியில் கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால், வீடு மற்றும் பொது சமூக கழிப்பறை, கழிவு சேகரிப்பு, கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்கள் ஆகியவற்றில்பணியாற்றும்தூய்மைப்பணியாளர்களின் விவரங்கள் கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டது.

இதில்தூய்மைப்பணியாளர்களின்குடும்பவிவரங்கள் குறித்து சேகரித்து, அரசு நலத் திட்டங்களுக்கு உள்படுத்தபடவுள்ளது.

இது குறித்து திருமுருகன்பூண்டி நகராட்சியில் நடைபெற்ற பயிற்சிக் கூட்டத்துக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக உதவித் திட்ட அலுவலர் ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். நகராட்சி ஆணையர் ஆண்டவன் தலைமை வகித்தார். தூய்மை இந்தியா திட்ட ஒருங்கிணைப்பாளர் நிஷாந்தினி, துப்புரவுஅலுவலர்செந்தில்குமார், ஆய்வாளர்செல்வம், மகளிர் குழுவினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# உரிய ஆவணங்கள் இல்லாமல் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 36 டன் எடையுள்ள விதை நெல் விற்பனைக்கு அதிகாரிகள் தடை

திருப்பூர், அக். 20

ஈரோடு விதை ஆய்வு துணை இயக்குனர் பெ.சுமதி தலைமையில், தாராபுரம் வட்டாரத்தில் உள்ள தனியார் நெல் விதை உற்பத்தி, விதை விற்பனை நிலையங்களில் ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம், காங்கயம்பகுதியைச் சேர்ந்த அலுவலர்கள் திங்கள்கிழமை சோதனை மேற்கொண்டனர். இதில் விதை விற்பனை உரிமம், விதை இருப்பு விலை, உண்மை நிலை விதைகளுக்கான ஆவணங்கள், முளைப்புத்திறன் பரிசோதனை முடிவு அறிக்கை உள்ளிட்டவற்றை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது விதை இருப்புக்கும், புத்தக இருப்புக்கும் உள்ள வேறுபாடு, உண்மை நிலை விதைகளுக்கான விதையின் ஆதார ஆவணங்கள் உள்ளிட்டவற்றை முறையாக பராமரிக்காதது தெரியவந்தது. இதையடுத்து, 36.47 டன் எடையுள்ள விதை நெல் குவியலை விற்பனை செய்யத் தடை விதிக்கப்பட்டது. இதன் மதிப்பு ரூ.11 லட்சம் ஆகும்.

இது குறித்து விதை ஆய்வுதுணை இயக்குநர் பெ.சுமதி கூறியதாவது, விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்யும்போது, விற்பனை ரசீது கொடுக்க வேண்டும். அதில் விதையின் பெயர், ரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவற்றுடன் விவசாயியின் பெயர் முகவரியுடன் விதை வாங்குபவரின் கையொப்பம் பெறப்பட்டிருக்க வேண்டும். விதை விற்பனை தொடர்பான ஆவணங்கள் இல்லாமல் விதை விற்பனை செய்வது விதைச் சட்டம் மற்றும் விதைக் கட்டுப்பாடு ஆணையத்தின்படி விதிமீறல் ஆகும். இது போன்ற விதை விற்பனை விதிமீறல்கள் கண்டறியப்படும் பட்சத்தில், விதை விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# அவிநாசி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.7 லட்சத்து 3 ஆயிரத்துக்கு பருத்தி ஏலம்

அவிநாசி, அக். 20

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.7 லட்சத்து 3 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற பருத்தி ஏலத்துக்கு மொத்தம் 366 பருத்தி மூட்டைகள் கொண்டுவரப்பட்டன. இதில், ஆர்.சி.ஹெச். பி.டி. ரகப் பருத்தி குவிண்டால் ரூ. 6,500 முதல் ரூ.7,119 வரையிலும், கொட்டு ரக (மட்டரக) பருத்தி குவிண்டால் ரூ. 2,000 முதல் ரூ.3,500 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.7 லட்சத்து 3 ஆயிரத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது.

# 25வது படம் ரிலீசையொட்டி 25 ஆயிரம் பேருக்கு உணவு வழங்கும் கார்த்தி



கார்த்தி தனது 25வது படம் தீபாவளிக்கு வெளியாவதை கொண்டாடும் வகையில் 25 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.

கார்த்தி 'சர்தார்', 'பொன்னியின்செல்வன்' படங்களுக்குபிறகுதற்போதுராஜுமுருகன் இயக்கத்தில் தயாராகி உள்ள 'ஜப்பான்' படத்தில் நடித்து முடித்துள்ளார். இது கார்த்தியின் 25வது படம் ஆகும்.

'ஜப்பான்' படம் தீபாவளி பண்டிகையில் திரைக்கு வரும் என்று அறிவித்து உள்ளனர். படத்தில் வரும் கார்த்தியின் தோற்றம் ஏற்கனவே வெளியாகி எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. தனது 25வது படம் தீபாவளிக்கு வெளியாவதை கொண்டாடும் வகையில் 25 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்க கார்த்தி ஏற்பாடு செய்துள்ளார்.

கார்த்தியின் அறிவுறுத்தலை ஏற்று ரசிகர்கள் அன்னதானம் வழங்கும் பணியை தொடங்கி உள்ளனர். ஒரேநாளில் 25 ஆயிரம் பேருக்கு உணவு வழங்குவதற்கு பதிலாக, தினமும் ஆயிரம் பேர் வீதம் தொடர்ந்து 25 நாட்கள் உணவு வழங்க உள்ளனர்.

கார்த்தியின் பேனர் கட்டிய வேனில் உணவை தெரு தெருவாக கொண்டு சென்று பொதுமக்களுக்கு வழங்கி வருகிறார்கள்.

# இரண்டாம் கட்ட படப்பிடிப்பை நிறைவு செய்த விஷால்.. விரைவில் வெளியாகும் டீசர்



நடிகர் விஷால் புதிய படம் ஒன்றில் நடித்து வருகிறார். இப்படத்தின்படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

சாமி, அருள், ஆறு, சிங்கம் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குனர் ஹரி தற்போது புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இப்படத்தில் விஷால் கதாநாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். மேலும், கவுதம் மேனன், சமுத்திரகனி மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

'விஷால் 34' என தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தை ஜீ ஸ்டுடியோஸ் சவுத் மற்றும் இயக்குனர் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் இணைந்துதயாரிக்கின்றனர். இப்படத்தின்படப்பிடிப்பு காரைக்குடியில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதாவது, காரைக்குடியில் நடைபெற்ற 'விஷால் 34' படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நிறைவு பெற்றுள்ளது. இதனை தனது சமூக வலைதளத்தில் புகைப்படத்தை பகிர்ந்து தெரிவித்துள்ள நடிகர் விஷால் விரைவில் டீசர் மற்றும் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகும் என குறிப்பிட்டுள்ளார்.

# ஆஸ்திரேலியாவில் மம்முட்டிக்கு தபால் தலை



ஆஸ்திரேலியா நாட்டின் பிரதமர் ஆண்டனி அல்பானிஸ், பிரன்ட்ஸ் ஆப் இந்தியா அமைப்பின்தலைவர் ஆண்ட்ரூ சார்டன் எம்.பி. ஆகியோர் பங்கேற்று மம்முட்டி உருவம் பதித்த தபால் தலையை வெளியிட்டனர்.

மலையாள சினிமாவின் சூப்பர் ஸ்டாராக திகழும் மம்முட்டிக்கு, ஆஸ்திரேலியாவில் கவுரவம் கிடைத்திருக்கிறது. மம்முட்டியின் கலை சேவையை அங்கீகரிக்கும் வகையில் அவரது சிறப்பு தபால் தலை, ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டு உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் ஆஸ்திரேலியா நாட்டின் பிரதமர் ஆண்டனி அல்பானிஸ், பிரன்ட்ஸ் ஆப் இந்தியா அமைப்பின் தலைவர் ஆண்ட்ரூ சார்டன் எம்.பி. ஆகியோர் பங்கேற்று மம்முட்டி உருவம் பதித்த தபால் தலையை வெளியிட்டு, இந்தியாவின் தலைமை கமிஷனர் மன்பிரீத் வோராவிடம் வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஆண்ட்ரூ சார்டன் பேசும்போது, "மம்முட்டி இந்திய கலாசாரத்தின் வெளிப்பாடாக திகழ்கிறார். அவரது கலை சேவையை பாராட்டுகிறோம்'', என்று குறிப்பிட்டார்.

இந்த சிறப்பு தபால் தலை ஆஸ்திரேலியா நாட்டின் சந்தைக்கு உடனடியாக வந்தது. வரும் நாட்களில் தபால் சேவைகளில் இந்த தபால் தலைகள் பயன்படுத்தப்பட இருக்கிறது. இது மம்முட்டி ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

# கமல் நடிக்கும் 234வது படத்தின் அறிமுக வீடியோ எப்போது ரிலீஸ் தெரியுமா?

நடிகர் கமல்ஹாசன் இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்கவுள்ளதாக கூறப்படுகிறது. நடிகர் கமல்ஹாசன் இயக்குனர் சங்கர் இயக்கத்தில் இந்தியன் 2 படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இப்படத்திற்கு பிறகு கமல், மணிரத்னம் இயக்கத்தில் 'கேஎச் 234' படத்தில் நடிக்கவுள்ளார். 37 வருடங்களுக்கு பிறகு இருவரும் இணையவுள்ளதால் ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மெட்ராஸ் டாக்கீஸ் மற்றும் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைப்பதாகவும், ரவி கே சந்திரன் ஒளிப்பதிவு செய்யவுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, கமல் நடிக்கும் 234வது படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் மற்றும் வீடியோ அவரது பிறந்தநாளான நவம்பர் 7ஆம் தேதி வெளியாகும் என தகவல் பரவி வருகிறது. இந்த தகவல் ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

# முத்த காட்சிக்கு மறுத்த மனிஷா



நடிகை மனிஷா யாதவ் முத்த காட்சியில் நடிக்கவே மாட்டேன் என்று மறுத்துவிட்டார்.

இளையராஜா இசையில் உருவாகி வரும் பள்ளிப் பருவ காதல் படம் "நினைவெல்லாம்நீயடா" இந்தபடத்துக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஆதிராஜன் டைரக்டு செய்கிறார். நாயகனாக பிரஜின், நாயகிகளாக மனிஷா யாதவ், சினாமிகா ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த படத்துக்காக பிரஜினும், மனிஷா யாதவும்உதட்டோடுஉதடுமுத்தமிடுவதை புகைப்படம் எடுத்து போஸ்டராக வெளியிட டைரக்டர் ஆதிராஜன் விரும்பினார். ஆனால் பிரஜினை முத்தமிட்டு போஸ் கொடுக்க மனிஷா யாதவ் மறுத்துவிட்டார்.

பின்னர் 'வச்சேன் நான் முரட்டு ஆசை எனக்கேதான்மிரட்டும்மீசை' என்றபாடல் காட்சியை படமாக்கியபோது மீண்டும் மனிஷாவை அணுகி உதட்டோடு உதடு முத்தமிடும் காட்சியில் நடிக்கும்படி வற்புறுத்தினார்.

அதற்கும் உடன்படவில்லை. முத்த காட்சியில் நடிக்கவே மாட்டேன் என்று மறுத்துவிட்டார். அதற்கு பதிலாக பிரஜின் கன்னத்தில் முத்தமிட்டு நடித்தார். இதனால் டைரக்டருக்கும், மனிஷாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

# ஏப்ரல் மாதம் படப்பிடிப்பு; 'ரஜினிகாந்தை வைத்து ஆக்ஷன் படம் இயக்குவேன்' டைரக்டர் லோகேஷ் கனகராஜ்



'ரஜினிகாந்தை வைத்து ஆக்ஷன் படம் இயக்குவேன்' என்று டைரக்டர் லோகேஷ் கனகராஜ் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள லியோ படம் இன்று திரைக்கு வந்துள்ளது.

இதையடுத்து அடுத்த படத்தை இயக்க லோகேஷ் கனகராஜ் தயாராகியுள்ளார். இதுகுறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் "லியோ படத்தில் பெரிய நடிகர்களுடன் பணியாற்றியது இனிய அனுபவம். படத்துக்கு வந்துள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

லியோ படத்தின் டிரைலரில் இடம்பெற்ற கெட்ட வார்த்தை வசனத்துக்கு பலர் வருத்தம் தெரிவித்தனர். இதனால் அந்த வசனம் படத்தில் இருந்து நீக்கப்பட்டு விட்டது.

கதைக்கு தேவைப்பட்டதால் அந்த வசனத்தை வைத்தேன். குறிப்பிட்ட அந்த வசனத்திற்கு நானே பொறுப்பு. விஜய்க்கு அதில் சம்பந்தமில்ல.

லியோ படம் 20 ஆயிரம் தியேட்டர்களில் திரையிடப்படுகிறது.

லியோ படத்தின் இசை வெளியீட்டு விழாவிற்கு கூட்டம் அதிகமாக வரும் என்பதாலும் இதனால் அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும் விழா ரத்து செய்யப்பட்டது.

அடுத்து ரஜினிகாந்த் நடிக்கும் படத்தையும், கைதி இரண்டாம் பாகம் படத்தையும் இயக்க இருக்கிறேன். ரஜினி நடிக்கும் படம் குடும்ப கதையாக இருக்காது. அது முழு ஆக்ஷன் படம். இந்த படத்தின் படப்பிடிப்பு ஏப்ரல் மாதம் தொடங்கும்'' என்றார்.

# கவலை பட வேண்டாம் நான் இருக்கிறேன்' ரோகித் சர்மாவின் கேப்டன்சி குறித்து ஹர்திக் பாண்ட்யா கருத்து!




13வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள இந்தியா, ஆஸ்திரேலியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்குள் நுழையும். அரைஇறுதி சுற்றை எட்ட குறைந்தது 6 வெற்றி தேவையாகும்.

இந்த தொடரில் இந்திய அணி ரோகித் சர்மாவின் தலைமையில் களமிறங்கியது. தற்போது மூன்று போட்டிகளில் விளையாடியுள்ள இந்திய அணி மூன்றிலும் வென்றுள்ளது. இதில் ரோகித்சர்மாவின்கேப்டன்சியை அனைவரும் பாராட்டினார்.

இந்நிலையில் இந்திய அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் ஹர்திக் பாண்ட்யாவிடம் ரோகித்சர்மாவின் கேப்டன்சி குறித்து கேட்டபோது, 'ரோஹித் ஷர்மாவின் கேப்டன்சியின் தன்மை சிறப்பானது. அவர் எந்த சூழ்நிலையிலும் மற்ற வீரர்களுக்கு உறுதுணையாக இருப்பார். எதிரணியினர் அடித்த பந்து பவுண்டரிக்கு சென்றாலும் கூட, கவலைப்பட வேண்டாம் நான் இருக்கிறேன் என கூறுவார்' என்று அவர் கூறினார்.

# 'ஏ' டிவிசன் லீக் கைப்பந்து: தமிழ்நாடு போலீஸ் அணி முதல் வெற்றி



சென்னை மாவட்ட கைப்பந்து சங்கம் சார்பில் எஸ்.என்.ஜெ. குழுமம் ஆதரவுடன் 'ஏ' டிவிசன்லீக்கைப்பந்து போட்டி எழும்பூரில் உள்ள மேயர்ராதாகிருஷ்ணன்ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது.

இதில் 10வது நாளான நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் தமிழ்நாடு போலீஸ் அணி 2523, 2125, 2826, 2517 என்ற செட் கணக்கில் டி.ஜி.வைஷ்ணவா அணியை வீழ்த்தி முதல் வெற்றியை பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் வருமான வரி அணி 2624, 2521, 2527, 2125, 159 என்ற செட் கணக்கில் சுங்க இலாகாவை போராடி வீழ்த்தியது. 5வது ஆட்டத்தில் ஆடிய வருமான வரி அணி பெற்ற 3வது வெற்றி இதுவாகும். சுங்க இலாகா அணிக்கு 5வது தோல்வியாகும்.

# கத்தார் மாஸ்டர்ஸ் செஸ் : மேக்னஸ் கார்ல்சனை வென்ற இந்திய வீரர் கார்த்திகேயன் முரளி




கத்தாரில் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த போட்டியில் பல்வேறு முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதுவரை 6 சுற்றுகள் முடிவடைந்துள்ள நிலையில் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த தொடரில் 7 வது சுற்று போட்டியில் உலக சாம்பியன் ஆன மேக்னஸ் கார்ல்சனை இந்திய வீரர் கார்த்திகேயன் முரளி எதிர் கொண்டார். இதில் அவர் கருப்பு காய்களுடன் ஆடினார். மிகவும் அற்புதமாக ஆடிய கார்த்திகேயன் கார்ல்சனின் சிறிய தவறை கச்சிதமாக பிடித்து கொண்டார். இதனை சரியாக பயன்படுத்தி இறுதியில் அவர் அபார வெற்றி பெற்றார். மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் கார்த்திகேயன் முரளி அபாரமாக ஆடி வெற்றி பெற்றார். இன்னும் 2 சுற்றுகள் மீதம் உள்ளன . தற்போது கார்த்திகேயன் 5.5 புள்ளிகளுடன் முன்னணியில் உள்ளார்.

இதன் மூலம் மேக்னஸ் கார்ல்சனை வென்ற 3 வது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். சமீபத்தில் நடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீர பிரக்யானந்தாவை வென்று மேக்னஸ் கார்ல்சன் சாம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# "உலகக்கோப்பை போட்டியில் பெரிய அணி என்பதே கிடையாது" விராட்கோலி




13வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள இந்தியா, ஆஸ்திரேலியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய அணிகள் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் டாப்4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்குள் நுழையும். அரைஇறுதி சுற்றை எட்ட குறைந்தது 6 வெற்றி தேவையாகும். ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி உலகக் கோப்பை போட்டியை சூப்பராக தொடங்கி இருக்கிறது. ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய அணிகளை வரிசையாக போட்டுத்தாக்கிய இந்தியா புள்ளி பட்டியலில் 6 புள்ளிகளுடன் 2வது இடத்தில் இருக்கிறது.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் விராட்கோலி, 'உலகக் கோப்பை போட்டியில் பெரிய அணி என்று எதுவும் கிடையாது' என்று தெரிவித்துள்ளார். அவர் டெலிவிஷனுக்கு அளித்த ஒரு பேட்டியில், 'உலகக் கோப்பை போட்டியில் பெரிய அணி என்று எதுவும் கிடையாது. பெரிய அணி என்று குறிப்பிட்ட ஒரு அணி மீது கவனம் செலுத்த தொடங்கும் போது அது நெருக்கடிக்கு ஆளாகி அதிர்ச்சி தோல்வியை சந்திக்க நேரிடும்' என்று தெரிவித்தார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழாவில் மராட்டிய மாநிலம் புனேயில் அரங்கேறும் 17வது லீக் ஆட்டத்தில் இந்திய அணி வங்காளதேசத்தை எதிர்கொள்கிறது.

# உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று: மெஸ்சி கோலால் அர்ஜென்டினா அபாரம்



2026ம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்துபோட்டியைகனடா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. இதற்கான தகுதி சுற்று பல்வேறு நாடுகளில் நடந்து வருகிறது. தென்அமெரிக்க கண்டத்துக்கான தகுதி சுற்றில் 10 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 6 இடங்களை பிடிக்கும் அணிகள் உலகக் கோப்பை போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும்.

இந்த நிலையில் லிமா நகரில் நேற்று முன்தினம் இரவு நடந்த தகுதி சுற்று ஒன்றில் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா 20 என்ற கோல் கணக்கில் பெருவை தோற்கடித்து தொடர்ந்து 4வது வெற்றியை பெற்று 12 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. அர்ஜென்டினா அணியில் இரு கோல்களையும் லயோனல் மெஸ்சி (32 மற்றும் 42வது நிமிடம்) அடித்தார். இதன் மூலம் சர்வதேச போட்டியில் மெஸ்சியின் கோல் எண்ணிக்கை 106 ஆக உயர்ந்தது. மற்றொரு ஆட்டத்தில் உருகுவே 20 என்ற கோல் கணக்கில் பிரேசிலுக்கு அதிர்ச்சி அளித்தது.

முன்னதாக பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மார் 44வது நிமிடத்தில் எதிரணி வீரர் இடித்து தள்ளியதில் கீழே விழுந்து கால்முட்டியில் காயமடைந்து, கண்ணீர் மல்க ஸ்டிரச்சரில்தூக்கி செல்லப்பட்டார். 4வது லீக்கில் ஆடிய பிரேசிலுக்கு இது முதலாவது தோல்வியாகும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.